**கவனிக்க.**- *27.09.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1831 - 2013 ඔක්තෝබර් මස 04 වැනි සිකුරාදා - 2013.10.04

*1831 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1850 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1858 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## அக்குரஸ்ஸ பிரதேச சபை

அக்குரஸ்ஸ பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழே காட்டப்பட்டுள்ள பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்பதற்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிப் பெயர் | வெற்றிடம் | மாதாந்த சம்பள அளவு | குறைந்தளவிலான கல்வித் தகைமைகள் | பொதுத் தகைமைகள் |
|---|---|---|---|---|
| தகன அறை இயக்குனர் | 01 | அ. சு. இல. 6/2006 இன் படி PL 2-2006A சம்பள அளவின் முதலாம் கட்டம் | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>மூன்றாம் தரம் மற்றும் தொழில் நுட்ப கல்விக் கொமிசன் சபையினால் தீர்மானிக்கப் பட்டிருக்கும் தேசிய தொழிற்துறைத் திறமையில் (N, V, Q) குறைந் தளவில் இரண்டாம் தர திறமையை பெற்றிருத்தல்.<br><br>உரிய துறையில் தேர்ச்சி பெற்றிருத் தல் மேலதிக தகுதியாகும். | இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.<br><br>நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.<br><br>விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதிக்கு குறைந் தளவில் தென் மாகாணத்தினுள் 03 வருட காலமாக நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். வதிவுப் பிரிவின் கிராம உத்தி யோகத்தர் மூலம் சிபாரிசு செய்து பிரதேச செயலாளரின் மேல் ஒப்பத்தின் மூலம் வதிவை உறுதி செய்தல் வேண்டும்.<br><br>பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகுதிகளை யும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு விளம்பரப்படுத்திய திகதிக்கு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| மின்சார தொழில் நுட்ப வியலாளர் | 01 | அ. சு. இல. 6/2006 இன் படி PL 2-2006A சம்பள அளவின் முதலாம் கட்டம் | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>மூன்றாம் தரம் மற்றும் தொழில் நுட்ப கல்விக் கொமிசன் சபையினால் தீர்மானிக்கப் பட்டிருக்கும் தேசிய தொழிற்துறைத் திறமையில் (N, V, Q) குறைந் தளவில் இரண்டாம் தர திறமையை பெற்றிருத்தல்.<br><br>உரிய துறையில் தேர்ச்சி பெற்றிருத் தல் மேலதிக தகுதியாகும். | இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.<br><br>நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.<br><br>விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதிக்கு குறைந் தளவில் தென் மாகாணத்தினுள் 03 வருட காலமாக நிரந்தர வதி வாளராக இருத்தல் வேண்டும். வதிவுப்பிரிவின் கிராம உத்தி யோகத்தர் மூலம் சிபாரிசு செய்து பிரதேச செயலாளரின் மேல் ஒப்பத்தின் மூலம் வதிவை உறுதி செய்தல் வேண்டும்.<br><br>பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு விளம்பரப்படுத்திய திகதிக்கு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |

| பதவிப் பெயர் | வெற்றிடம் | மாதாந்த சம்பள அளவு | குறைந்தளவிலான கல்வித் தகைமைகள் | பொதுத் தகைமைகள் |
|---|---|---|---|---|
| அலுவலக அலுவல் உதவியாளர் | 01 | அ. சு. இல. 6/2006 இன் படி PL1-2006A சம்பள அளவின் முதலாம் கட்டம் | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது குறைந்தளவில் 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.<br><br>நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.<br><br>விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதிக்கு குறைந் தளவில் தென் மாகாணத்தினுள் 03 வருட காலமாக நிரந்தர வதிவாள ராக இருத்தல் வேண்டும். வதிவுப் பிரிவின் கிராம உத்தியோகத்தர் மூலம் சிபாரிசு செய்து பிரதேச செயலாளரின் மேல் ஒப்பத்தின் மூலம் வதிவை உறுதி செய்தல் வேண்டும்.<br><br>பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு விளம் பரப்படுத்திய திகதிக்கு பூர்த்தி செய் திருத்தல் வேண்டும். |
| நூலக உதவியாளர் | 01 | அ. சு. இல. 6/2006 இன் படி PL1-2006A சம்பள அளவின் முதலாம் கட்டம் | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது குறைந்தளவில் 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.<br><br>நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.<br><br>விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதிக்கு குறைந்தளவில் தென் மாகாணத்தினுள் 03 வருட காலமாக நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். வதிவுப் பிரிவின் கிராம உத்தியோகத்தர் மூலம் சிபாரிசு செய்து பிரதேச செயலாளரின் மேல் ஒப்பத்தின் மூலம் வதிவை உறுதி செய்தல் வேண்டும்.<br><br>பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு விளம் பரப்படுத்திய திகதிக்கு பூர்த்தி செய் திருத்தல் வேண்டும். |
| தகன அறை உதவியாளர் | 01 | அ. சு. இல. 6/2006 இன் படி PL1-2006A சம்பள அளவின் முதலாம் கட்டம் | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது குறைந்தளவில் 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். | இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.<br><br>நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.<br><br>விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதிக்கு குறைந்தளவில் தென் மாகாணத்தினுள் 03 வருட |

| பதவிப் பெயர் | வெற்றிடம் | மாதாந்த சம்பள அளவு | குறைந்தளவிலான கல்வித் தகைமைகள் | பொதுத் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | காலமாக நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். வதிவுப் பிரிவின் கிராம உத்தியோகத்தர் மூலம் சிபாரிசு செய்து பிரதேச செயலாளரின் மேல் ஒப்பத்தின் மூலம் வதிவை உறுதி செய்தல் வேண்டும்.<br><br>பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு விளம்பரப்படுத்திய திகதிக்கு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |
| சுகதார உதவியாளர் | 03 | அ. சு. இல. 6/2006 இன் படி PL1-2006A சம்பள அளவின் முதலாம் கட்டம் | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் | இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.<br><br>நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.<br><br>விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதிக்கு குறைந் தளவில் தென் மாகாணத்தினுள் 03 வருட காலமாக நிரந்தர வதிவாள ராக இருத்தல் வேண்டும். வதிவுப் பிரிவின் கிராம உத்தியோகத்தர் மூலம் சிபாரிசு செய்து பிரதேச செயலாளரின் மேல் ஒப்பத்தின் மூலம் வதிவை உறுதி செய்தல் வேண்டும்.<br><br>பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு விளம் பரப்படுத்திய திகதிக்கு பூர்த்தி செய் திருத்தல் வேண்டும். |
| சாரதி | 01 | அ. சு. இல. 6/2006 இன் படி PL3-2006A சம்பள அளவின் முதலாம் கட்டம் | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது குறைந்தளவில் 06 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். மோட்டார் வாகன பிரயாண ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரம் அல்லது தகுதிசார் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். (குறைந்தளவில் 03 வருட கால தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.) | இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.<br><br>நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.<br><br>விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதிக்கு குறைந் தளவில் தென் மாகாணத்தினுள் 03 வருட காலமாக நிரந்தர வதிவாள ராக இருத்தல் வேண்டும். வதிவுப் பிரிவின் கிராம உத்தியோகத்தர் மூலம் சிபாரிசு செய்து பிரதேச செயலாளரின் மேல் ஒப்பத்தின் மூலம் வதிவை உறுதி செய்தல் வேண்டும். |

| பதவிப் பெயர் வெற்றிடம் | மாதாந்த சம்பள அளவு | குறைந்தளவிலான கல்வித் தகைமைகள் | பொதுத் தகைமைகள் |
|---|---|---|---|
| | | | பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு விளம் பரப்படுத்திய திகதிக்கு பூர்த்தி செய் திருத்தல் வேண்டும். |

**வேறு :**

(1) தற்போது அக்குரஸ்ஸ பிரதேச சபையில் நிரந்தர/அமைய/தற்காலிக/பதில்/ஒப்பந்த முறையில் சேவை புரியும் ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ;

(2) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாததும் 45 வயதுக்கு கூடாததுமாக இருத்தல் வேண்டும். (தற்போது நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் வயது எல்லை கணிக்கப்படமாட்டாது.) ;

(3) விண்ணப்பதாரிகள் தண்டனை நீதிச் சட்டத்தின்கீழ் நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து தரம் குறைக்கப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(4) விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் அல்லது கோரப்படும் காலவரையறைக்குள் ஆட்சேர்ப்பு தொடர்பாக தாமதம் செய்தல், வேறுபடுத்தல், அறிவித்தல்களை இரத்துச் செய்தல், திருத்துதல் போன்ற அனைத்து செயற்பாடுகளும் அக்குரஸ்ஸ பிரதேச சபையின் செயலாளரைச் சாரும்.

**ஆட்சேர்ப்பு முறை :**

(1) நேர்முகப் பரீட்சையின் பின் தேர்ந்தெடுக்கப்படும் ;

(2) உரிய தகுதிகளைப் பெற்றவர்கள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்.

**சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள் :**

(1) இப்பதவி நிரந்தரம் மற்றும் ஓய்வூதியம் உடையதாகும் ;

(2) விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உரித்துடையவர் ஆவர் ;

(3) இப்பதவி 03 வருட பயிற்சி காலத்திற்கு உட்பட்டதோடு 03 வருடத்தின் பின் வேலை, வருகை, நடத்தை என்பன சிறந்த நிலையில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் நிரந்தர நியமனக் கடிதம் வழங்கப்படும் ;

(4) இந்த ஆட்சேர்ப்பு இலங்கைச் சனநாயக குடியரசின் நிருவாக கோவையின் கட்டளைகளுக்கும் நிதிக் கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் மற்றும் தென் மாகாண சபையினால் அடிக்கடி விதிக்கப்படும் கட்டளைகளுக்கு அனுசரித்து செயற்பட அனைத்து ஊழியர்களும் இணைந்திருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கப்படவேண்டிய முறை.-** இவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்க ஏ4 அளவிலான தயார் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2013.11.21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதமாக "செயலாளர், அக்குரஸ்ஸ பிரதேச சபை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் போடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியை குறிப்பிடப்படல் வேண்டும். உரிய திகதிக்கு பின் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும்.

விண்ணபப்பத்திரங்களுடன் கீழே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) கல்விச் சான்றிதழ் ;

(3) வதிவினை உறுதிப்படுத்த கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் (பிரதேச செயலாளரின் உறுதியுடன்) ;

(4) சமீப காலத்தில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு ;

(5) பயிற்சி தொடர்பான சான்றிதழ்கள் ;

(6) அக்குரஸ்ஸ பிரதேச சபையில் சேவை புரிவதாயின் சேவைச் சான்றிதழ்.

பீ. ஜீ. பியல் ரனதேவ,
செயலாளர்,
அக்குரஸ்ஸ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அக்குரஸ்ஸ,
2013, செத்தெம்பர் 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அக்குரஸ்ஸ பிரதேச சபை**

......................................................................... பதவி

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துடன்) :----.
2. முதலெழுத்துக்களை குறிப்பிடும் பெயர் :----.
3. நிரந்தர விலாசம் :----.
4. தொலைபேசி இலக்கம் :----.
5. மாவட்டம் :----.
6. பிறந்த திகதி :----.
   ஆண்டு :----, மாதம் :----, நாட்கள் :----.
7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
8. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :-
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
9. ஆண்/பெண் :----.
10. திருமணமானவரா? திருமணமாகாதவரா? :----.
11. சாதி :----.
12. இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பிரஜா உரிமை மூலமா? பதிவின் மூலமா? :----.
13. கல்வித் தகைமைகள் :-

| விடயம் | திறமை | விடயம் | திறமை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

14. அனுபவம் மற்றும் சேவைப்பயிற்சி :----.
15. தற்போது அக்குரஸ்ஸ பிரதேச சபையில் சேவை புரிவதாயின் :----.
    * தற்போது வகிக்கும் பதவி :----.
    * அப்பதவிக்கு சேர்ந்த திகதி :----.
    * அப்பதவியின் தரம் நிரந்தர/அமைய/தற்காலிக/பதில்/ஒப்பந்த முறையிலா) :----.

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானதும் அதில் எதுவும் பிழை இல்லை எனவும் சான்றுபடுத்துகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக என்னால் தரப்பட்ட தகவல்கள் பிழையானது எனத் தெரியவந்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின் தெரியவந்தால் எனது நியமனம் எந்தவித தடைப்பணமுமின்றி இரத்துச் செய்யப்பட வேலையிலிருந்து நீக்கப்பட ஏதுவாகும் என நான் அறிந்து கையொப்பமிடுகின்றேன்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தொடர்பாக நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியாகிய ............................................ திரு./திருமதி/செல்வி தற்போது அந்த நிறுவனத்தில் ............................................ உத்தியோகத்தராக சேவை புரிகிறார். விண்ணப்பப்படிவத்தினை சான்றுப்படுத்திய/சான்றுபடுத்தாது முன்வைக்கின்றேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(இறப்பர் முத்திரை)

திகதி :----.

10-36

## கற்பிட்டி பிரதேச சபை

பதவிகள் வெற்றிடங்கள்

கற்பிட்டி பிரதேச சபையில் வெற்றிடங்களாக உள்ள வடமேல் மாகாண அரசாங்க சேவையின் III ஆம் தரத்திலான பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | பதவிப் பெயர் | பதவி | வேதன குறியீடு | வேதன அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | மின்சாரவியலாளர் | 01 | PL - 3 2006A | ரூ.12,47010×130-10×145-10×160-12×170-ரூபா18,860 | க. பொ. த. (சா. த) பரீட்சையில் இரண்டு முறைக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி உட்பட 06 பாடங்களில் சித்தி. ஒரு அமர்வில் குறைந்தபட்சம் 05 பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.<br><br>தொழில்பயிற்சி அதிகார சபையால் வழங்கப் பட்ட பதவிக்குரிய NVQ 4 மட்டத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>உரிய பயிற்சிக் காலம் தவிர்ந்த 03 வருடங்களுக்கு செயல்முறை அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ் மூலம் ஒப்புவிக்கப்படவேண்டும்.) |
| 2. | நூலகப் பணியாளர் | 02 | PL-1 2006A | ரூபா11,730-10×130-10×145-10×160 ரூபா 17,600 | க.பொ.த.(சா.த) பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தி. (வாய்மூலப் பரீட்சை தவிர்ந்த) |
| 3. | வெளிக்கள ஊழியர்/ வேலையாளர் | 01 | PL-1 2006A | ரூ. 11,730-10×120-10×130 -10×145 10×160-ரூபா 17,600 | க. பொ. த. (சா. த) பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தி. (வாய்மூலப் பரீட்சை தவிர்ந்த) |
| 4. | காவலாளி | 01 | PL-1006A | ரூ. 11,730-10×120-10×130 -10×145 10×160-ரூபா 17,600 | க. பொ. த. (சா. த) பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தி. (வாய்மூலப் பரீட்சை தவிர்ந்த) |
| 5. | சாரதி | 03 | PL-3 2006A | ரூ. 12,470-10×130-10×145 -10×160 12×170-ரூபா 18,860 | க. பொ. த. (சா. த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் 06 பாடங்களில் சித்தி. ஒரு தடவையில் குறைந்தபட்சம் 05 பாடங்களில் சித்தியுடன் 34 தொன்களுக்கு மேற்பட்ட நிறையிலான மோட்டார் வாகனம் மற்றும் ட்ரெய்லர் செலுத்தல் மற்றும் 34 பிரயாணிக்கு மேலாக ஏற்றிச் செல்லத்தக்க பஸ் வண்டி செலுத்துவதன் பொருட்டு மோட்டார் வாகன ஆணையாளரால் வழங்கப்பட்ட அத்தாட்சி (A தரத்திலான வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்துடன் 3 வருட வாகன ஓட்டுதல் அனுபவச் சான்றிதழ். சேவைச் சான்றிதழால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| 6. | சுகாதார மேற்பார்வையாளர் | 01 | PL-1 2006A | ரூ. 11,730-10×120-10×130 -10×145 10×160-ரூபா 17,600 | க. பொ. த. (சா. த) பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தி. (வாய்மூலப் பரீட்சை தவிர்ந்த) |

**பொது தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர்கள் பிறப்பு அல்லது பதிவு வழியாக இலங்கையராக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரர் கற்பிட்டி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் தொடராக 03 வருட நிரந்தர வதிவைக் கொண்டவராயிருத்தல் வேண்டும். (வதிவு வாக்காளர் இடாப்பு அல்லது பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட அத்தாட்சி மூலம் வதிவை உறுதி செய்தல் அவசியம்) ;
(iii) கற்பிட்டி பிரதேச சபையில் தற்போது நிரந்தர/அமய/சமயா/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் சேவை புரிவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் ;
(iv) சிறந்த நல்லொழுக்கமும், நல்ல தேகாரோக்கியமும் உள்ளவராயிருத்தல் அவசியம் ;
(v) விண்ணப்பதாரர் இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டவராக அல்லது மாகாண சேவையிலிருந்து அல்லது அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படாதவராக இருத்தல் வேண்டும் ;
(vi) சேவையின் முக்கியத்துவத்தை அனுசரித்து முறையான நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
(vii) விண்ணப்பம் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலப் பகுதியில் சேர்த்துக்கொள்ளப்படலை தாமதப்படுத்தல், அல்லது மாற்றஞ் செய்தல் அல்லது இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது இதில் திருத்தஞ் செய்தல் போன்றவை கற்பிட்டி பிரதேச சபையின் உரிமையாகும்.

**சேர்த்துக்கொள்ளும் முறை :**

(i) வடிவமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவுகள் மேற்கொள்ளப்படும் ;
(ii) தேவையான தகைமைகளைக் கொண்டோர் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**சேவையில் ஈடுபடுத்துதலுக்கான கட்டுப்பாடுகள் :**

(i) பதவிகள் நிரந்தரமானதும், ஓய்வூதியத்தைக் கொண்டதுமாகும் ;
(ii) விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும் ;
(iii) பதவி 03 வருட கால தகுதிகாண் நிலையைக் கொண்டதாகும். தகுதிகாண் காலத்தில் தேவையான ஏனைய தகைமைகள் பூர்த்தி செய்யப்படும் பட்சத்து பதவி நிரந்தரமாக்கப்படும் ;
(iv) பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்படல் இலங்கைக் குடியரசின் தாபனக் கோவை நிதிச் சட்டக்கோவை, திணைக்கள கட்டளைகள், அரசாங்கத்தினால் அல்லது மாகாண சபையினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள் மற்றும் கட்டளைகளுக்கு உட்பட்டு நடக்க அனைத்து ஊழியர்களும் கட்டுப்பட்டிருப்பார்கள்.

**விண்ணப்பிக்கும் முறை**.- விண்ணப்பதாரர்கள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் அடிப்படையில் ஏ4 அளவு கொண்ட கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2013.10.21 ஆந் திகதியன்று அல்லது முன்னர் கிடைக்கும் வண்ணம் "செயலாளர், பிரதேச சபை, கற்பிட்டி" என்னும் முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கியுள்ள தபால் உறையின் இடது புற மேல் மூலையில் "........................................ பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும். பரிபூரணமற்ற விண்ணப்பங்களும் தாமதமாகிக் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் வரவழைக்கப்பட்ட பின்னர் அல்லது வரவழைக்கப்படும் தருணத்தில் சேர்த்துக் கொள்ளலைத் தாமதப்படுத்தல், மாற்றஞ் செய்தல், அல்லது இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல் தொடர்பான பரிபூரண அதிகாரம் பிரதேச சபையின் உரித்தாகும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் வெவ்வேறு விண்ணப்பப்படிவங்கள் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களின் இணைப் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும் என்பதுடன் நேர்முகப் பரீட்சையின்போது அவற்றின் மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் :-

(i) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) வதிவை உறுதிப்படுத்தும் அத்தாட்சி (பிரதேச செயலாளரின் இணை கையொப்பத்துடன் கிராம அலுவலர் சான்றிதழ்) ;
(iv) அண்மையில் பெறப்பட்ட 02 ஒழுக்கச் சான்றிதழ் ;
(v) அனுபவம் அல்லது தொழிற் தகைமை பற்றிய சான்றிதழ்கள் ;
(vi) கற்பிட்டி பிரதேச சபையில் சேவையாற்றுபவராயின் சேவைச் சான்றிதழ்.

எம். டபிள்யு. குலவங்ச,
செயலாளர்,
கற்பிட்டி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கற்பிட்டி,
2013, ஒற்றோபர் 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கற்பிட்டி பிரதேச சபை**

.......................................................... பதவி

1. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரரின் பெயர் :----.
2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.
3. முகவரி :-----.
4. தொலைபேசி இலக்கம் :----.
5. பிறந்த திகதி :----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
7. விண்ணப்பம் ஏற்கப்படும் கடைசித் திகதியில் வயது :----.
   வருடங்கள் :----, மாதங்கள் :----. நாட்கள் :----.
8. பால் :----.
9. திருமணமானவரா, ஆகாதவரா? :----.
10. தேசிய இனம் :----.
11. இலங்கையரானது பிறப்பினாலா, பதிவினாலா? :----.
12. கல்வித் தகைமைகள் :----.
13. தகைமைகளும் அனுபவங்களும் :----.
14. தாங்கள் தற்போது கற்பிட்டி பிரதேச சபையில் சேவையாற்றுபவராயின் :
    (1) தற்போது வகிக்கும் பதவி :----.
    (2) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
    (3) பதவியின் தன்மை :
    (நிரந்தர/அமைய/சமயாசமய/தற்காலிக/ஒப்பந்த)
15. யாதாயினுமொரு குற்றச் செயல் அல்லது குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின் அக்குற்றம் மற்றும் அதற்கான தண்டனை பற்றிய விபரம் :----.

இங்கு விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், பிழையற்றது எனவும் இத்தால் உறுதி செய்கிறேன்.

இங்கு காணப்படும் யாதாயினுமோர் தகவல் பொய்யானது அல்லது பிழையானது என இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தான் தகுதியற்றவராகக் கருதப்படுவதற்கும், நியமனம் பெற்ற பின்னர் கண்டுபிடிக்கப்படின் நட்டஈடு வழங்கப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நன்கறிவேன். சொல்லப்பட்ட கட்டுப்பாடுகள் அனைத்துக்கும் நான் கட்டுப்பட்டு நடப்பேன் என இத்தால் உறுதியளிக்கிறேன்.

..............................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**ஏற்கனவே சேவையில் உள்ளோர் தொடர்பாக திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி.........................................................இந்த நிறுவனத்தில் ................................ ஆகக் கடமையாற்றுகிறார். கோரப்பட்டுள்ள பதவியின் பொருட்டு அவர் தெரிவுசெய்யப்பட்டால் இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது எனவும், அவர் யாதொரு வகையிலும் தண்டனைக்கு ஆளாகவில்லை எனவும் இத்தால் அறிக்கையிடுவதோடு விண்ணப்பத்தை சிபாரிசு செய்கிறேன்/சிபாரிசு செய்யாமல் சமர்ப்பிக்கிறேன்.

..................................,
திணைக்கள/நிறுவன தலைவரின்
கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)
திகதி :----.

10-47

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## கெக்கிராவ பிரதேச சபை

களியாட்டவரி விதிப்பனவு

கெக்கிராவை பிரதேச சபையினால் 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 2011-435 இன்கீழ் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் யோசனைக்கு 1989 ஆம் ஆண்டின் 112 ஆம் இலக்க மாகாண சபைச் (இணைந்த ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) பக்கத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 267 ஆம் அத்தியாயமான களியாட்ட வரிச் சட்டத்தின் மூலம் 2 ஆம் பிரிவில் எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்கீழ் வடமத்திய மாகாணத்தின், மாகாண சபை உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் எஸ். எம். ரஞ்ஜித் சமரகோன் அவர்களினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்பதை மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

**யோசனை :**

267 ஆம் அத்தியாயமான 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் கொண்ட களியாட்ட வரி கட்டளைகள் சட்டத்தின் 2 (1) ஆவது பிரிவின் கீழ் கெக்கிராவ பிரதேச சபையினால் சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நடாத்தப்படும் (சட்டமூலத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு) களியாட்ட நடவடிக்கைகளுக்கான நுழைவுக்காக அறவிடப்படும். கொடுப்பனவுகளில் இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு வரி இந்த யோசனை வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதியிலிருந்து வித்து அறவிடுமாறு கெக்கிராவ பிரதேச சபை தீர்மானிக்கிறது.

**அட்டவணை :**

267 ஆம் அத்தியாயமான களியாட்ட வரிச்சட்டத்தின் மூலம் விடயங்களுக்கு ஏற்புடையதாகவும் ஏதேனும் ஒரு களியாட்ட நடவடிக்கையை கெக்கிராவ பிரதேச சபை அதிகார எல்லைப் பிரதேசத்திற்குள் நடாத்தும் ஒவ்வொரு நபராலும் அந்த களியாட்ட நடவடிக்கை (அ) ஒரு திரைக் காட்சியாக காணப்படும் பட்சத்தில் அதற்கான நுழைவு அனுமதிக்கப்படும். ஒவ்வொரு நபரிடமிருந்தும் அறவிடப்படும் பணத்தில் 8% ஆன சம அளவுப் பணத்தையும், (ஆ) வேறு ஏதேனும் களியாட்ட விடயமாக இருப்பின் அதற்கான நுழைவு அனுமதிக்கப்படும். ஒவ்வொரு நபரிடமிருந்தும் அறவிடப்படும் பணத்தின் 12% ஆன சம அளவுப் பணத்தையும், மேலே குறிப்பிடப்பட்ட களியாட்ட வரிச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குக் கிடைக்கப்பெற்றிருக்கும் அதிகாரத்தின் பிரகாரம், களியாட்ட வரியாக விதித்து அறவிட வேண்டுமெனவும் அக்களியாட்ட நிகழ்வை நடாத்தும் திகதிக்கு முன்னர் அக்களியாட்ட வரியை கெக்கிராவ பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டுமெனவும் கெக்கிராவ பிரதேச சபை தீர்மானித்திருக்கிறது.

எஸ். எம். ரன்ஜித் சமரகோன்,
முதலமைச்சர்,
வடமத்திய மாகாணம்.

பிரதேச சபை அலுவலகம்,
அனுராதபுரம்,
2012.08.13.

10-39

---

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை - புத்தூர்

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமமளித்தல் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தம்

இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபரிடத்தில் அவரின் பெயருக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள களரியை 2014 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்கு மேற்படி உரிமமளித்தல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

அத்தகைய உரிமம் அக்களரிக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் சொல்லப்பட்ட களரிக்கென உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவுக்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் தனது ஆட்சேபனைக்கான ஏதுக்கள் பற்றிய எழுத்துமூலமான

கூற்றொன்றினை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இரு பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

அ. உதயகுமார்,
தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

பிரதேச சபை அலுவலகம்,
வலிகாமம் கிழக்கு,
புத்தூர்,
2013.09.16.

**அட்டவணை**

| விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா செயலாளரா அல்லது முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தேசித்திருக்கின்ற மனைக்கலம் |
|---|---|---|---|
| சிவப்பிரகாசம் சிவரூபன் புலோலி தெற்கு புலோலி | செயலாளர் | றோயல் பொழுதுபோக்குக் கழகம் | சுன்னாகம் றோட் புத்தூர் |

10-101

---

**திக்குவெல்ல பிரதேச சபை**

தென் மாகாண உள்ளூராட்சி சபை திக்குவெல்ல பிரதேச சபையினால் 2013.02.22 ஆந் திகதியுடைய இல. 1799 வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன், இந்த அறிவித்தலும் உள்ளடக்கப்படுகிறது.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 (1) (ஆ) பிரிவின் கீழான அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், திக்குவெல்ல பிரதேச சபை கிரினெலிய-ரதம்பல பாதையில் ரன்னாவல பழைய அறநெறிப் பாடசாலை அண்மையிலிருந்து ரன்னாவல கல்ஹேன்கொட பாதையுடன் இணையும் சிறு விதியானது திக்குவெல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான பாதை, வீதிகளின் பாதையொன்றாகப் பகிரங்கப்படுத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக பிரதேசத்தின் பொது மக்கள் மூலம், அல்லது காணி உரிமையாளர்கள் மூலமாகவோ ஏதேனும் ஆட்சேபனைகள் வேண்டுமாக இருப்பின், இவ்வறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் தொடங்கி, ஒரு மாதத்திற்குள், தத்தமது உரிமைகளை நிரூபிப்பதற்காக, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 (1) (ஆ) பிரிவின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இந்தக் கால எல்லைக்குள், இவ்வறிவித்தலைப் பற்றிய ஆட்சேபனைகள் ஏதும் சமர்ப்பிக்கப்படாதிருப்பின் துணைப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட பாதையானது, திக்குவெல்ல பிரதேச சபைக்குச் சொந்தமானதெனக் கருதப்படுவதுடன், அதன் மீதான அதிகாரங்கள், கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமெனவும், பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தால் அறியத்தருகின்றேன்.

கிறிஷாலி முதுகுமாரன,
தலைவர்,
திக்குவெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
திக்குவெல்ல,
2013, செத்தெம்பர் 18.

**அட்டவணை**

| பாதையின் பெயர் | பாதையின் ஆரம்பம் | பாதையின் முடிவு | பாதையின் நீளம் |
|---|---|---|---|
| கிரினெலிய-ரதம்பல பாதையில் ரன்னாவல பழைய அறநெறிப் பாடசாலை அண்மையிலிருந்து ரன்னாவல கல்ஹேன்கொட பாதையுடன் இணையும் சிறு வீதி | கிரினெலிய-ரதம்பல பாதை | ரன்னாவல கல்ஹேன்கொட பாதை | 680.75 மீ. |

*10-152*

---

**எல்ல பிரதேச சபை**

*சமூக நீர் வடிகாலமைப்பு தொடர்பிலான துணை விதிக்கு கீழான அறிவித்தல்*

*எல்ல பிரதேச சபையின் 2013.06.27 ஆந் திகதிய அமர்வின்போது பிரேரணை இலக்கம் 03 - 03 இன் கீழ் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதென பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.*

*எச். எம். சுனில் காமினி,*
*தலைவர்,*
*எல்ல பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*எல்ல,*
*2013.08.15.*

**பிரேரணை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடை நேர்விளைவான) சட்டத்தின் 2 ஆம் பிரிவோடு வாசிக்கவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி சபை (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் ஊவா மாகாண சபையின் உள்ளூராட்சிமன்ற அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 1794/12 ஆம் இலக்க இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் 2013.07.22 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட இத்துணை விதிகள் சமூக "அடிப்படையிலான அமைப்புக்களினால் முகாமைத்துவம் செய்யப்படும் கிராமிய நீர்வழங்கல் திட்டத்துணை விதிகள்" என அறிமுகப்படுத்தப்படும்.*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவோடு வாசிக்க வேண்டியதும் அந்தச் சட்டத்தின் 93 ஆம் பிரிவினதும் 126 ஆம் பிரிவின் 9 ஆம் உப பிரிவின்படி தனக்குரித்தாக்கப்பட்ட உரிமங்களின்படி எல்ல பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களின் நடைமுறைப்படுத்த வேண்டிய துணைவிதி என இந்தப் பிரேரணை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட திகதி முதல் ஏற்று நடைமுறைப்படுத்த மேற்கூறிய உள்ளூராட்சி மன்ற (துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின்படி எல்ல பிரதேச சபை பிரேரிக்கின்றது.*

*இந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகளின் பொருள் கோடல் செய்யும்போது துணைவிதிகளில் குறிப்பிட்ட சபை, தலைவர், செயலாளர் மற்றும் பிரதேச சபை ஆதிக்கப் பகுதி என்ற சொற்கள் மூலமாக எல்ல பிரதேச சபையின் தலைவர், செயலாளர் மற்றும் பிரதேச சபை ஆதிக்கப் பிரதேசம் என்பது பொருளாகும்.*

*10-166*

**பருத்தித் துறை பிரதேச சபை - புலோலி**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமமளித்தல் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தம்*

இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபரிடத்தில் அவரின் பெயருக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள களரியை 2014 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்கு மேற்படி உரிமமளித்தல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

அத்தகைய உரிமம் அக்களரிக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் சொல்லப்பட்ட களரிக்கென உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவுக்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் தனது ஆட்சேபனைக்கான ஏதுக்கள் பற்றிய எழுத்துமூலமான கூற்றொன்றினை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இரு பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

பூ. சஞ்சீவன்
தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பருத்தித்துறை,
புலோலி,
2013.08.21.

**அட்டவணை**

| விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா செயலாளரா அல்லது முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தேசித்திருக்கின்ற மனைக்கலம் |
|---|---|---|---|
| பொன்னையா செல்வகிருஸ்ணன் கூவில், புலோலி தெற்கு, புலோலி. | செயலாளர் | புலோலி பொழுதுபோக்குக் கழகம் | மந்திகை புலோலி தெற்கு, புலோலி. |

10-167

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2013**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.09.2013 |
| | | வெள்ளி | 11.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2013 |
| | | வியாழன் | 17.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.10.2013 |
| | | வெள்ளி | 25.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.10.2013 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 01.11.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 17.10.2013 |
| | | வெள்ளி | 08.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2013 |
| | | வெள்ளி | 15.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2013 |
| | | வெள்ளி | 22.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2013 |
| | | வெள்ளி | 29.11.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.11.2013 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 06.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2013 |
| | | வெள்ளி | 13.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2013 |
| | | வெள்ளி | 20.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2013 |
| | | வெள்ளி | 27.12.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.